# பொது சிவில் சட்ட மசோதா: அஸ்ஸாம் சட்டப்பேரவையில் அறிமுகம்

**குவாஹாட்டி, மே 25:** பலதார மணத்துக்குத் தடை, திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழும் ஜோடிகள் பதிவு கட்டாயம் உள்ளிட்ட பல்வேறு அமசங்களுடன் கூடிய பொது சிவில் சட்ட மசோதா அஸ்ஸாம் மாநில சட்டப்பேரவையில் மாநில அரசு சார்பில் திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டம் மாநிலத்தில் வாழும் பழங்குடியினருக்குப் பொருந்தாது என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில பேரவை விவகாரத் துறை அமைச்சர் அதுல் போரா இந்த மசோதாவை தாக்கல் செய்தார். அப்போது, 'பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனை நடத்திய பிறகே இந்த மசோதா தாக்கல் செய்யப்பட வேண்டும்' என்று கூறி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களுக்குப் பதிலளித்து முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மா பேசியதாவது:



ஹிமந்த விஸ்வ சர்மா

திருமணம், விவாகரத்து, வாரிசு உரிமை, திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழும் உறவு உள்ளிட்டவற்றை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகிக்கும் சட்டங்களை ஒருங்கிணைப்பதையும், எளிமைப்படுத்துவதையும் இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21-ஆகவும், பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 18-ஆகவும் மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, தற்போது நடைமுறையில் உள்ள சமய, சம்பிரதாய சடங்களுக்கு உட்பட்டு திருமணங்கள் நடைபெறுவதை அனுமதித்து மாநிலத்தின் கலாசார பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது. திருமணங்கள் மற்றும் விவாகரத்தை பதிவு செய்வதை மசோதா கட்டாயமாக்குகிறது. அதன்மூலம், துணைவியருக்கு ஜீவனாம்சம், வாரிசுரிமை உள்ளிட்ட பிற சட்ட உரிமைகள் உறுதி செய்யப்படும்.

திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழும் ஜோடிகளுக்கான சட்டக் கட்டமைப்பை இந்த மசோதா முதல் முறையாக வகுத்துள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 44-ஆவது பிரிவின் கீழ், குடிமக்கள் அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டத்தை (சீரான உரிமையியல் சட்டம்) உருவாக்க அரசு முயல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மதம், இனம், மற்றும் பாலின பாகுபாடின்றி மாநிலத்தின் அனைத்துக் குடிமக்களுக்கும் திருமணம், விவாகரத்து, தத்தெடுப்பு, மற்றும் வாரிசுரிமை போன்ற தனிநபர் விவகாரங்களுக்கு ஒரே மாதிரியான பொதுவான சட்டங்களை உருவாக்க இந்த மசோதா முற்படுகிறது என்றார்.

## தில்லியில் இன்று முக்கியக் கூட்டம்

# கர்நாடக முதல்வர் சித்தராமையாவுக்கு காங்கிரஸ் மேலிடம் அழைப்பு

**பெங்களூரு, மே 25:** தில்லியில் செவ்வாய்க்கிழமை (மே 26) காலை 11 மணிக்கு நடைபெறும் முக்கியக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் சித்தராமையாவுக்கு காங்கிரஸ் மேலிடம் அழைப்பு விடுத்துள்ளது.

2023-ஆம் ஆண்டு கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தலா இரண்டரை ஆண்டுகளுக்கு முதல்வர் பதவியை பகிர்ந்துகொள்வதாக கட்சி மேலிடத் தலைவர்களின் முன்னிலையில் சித்தராமையாவுக்கும், டி.கே.சிவகுமாருக்கும் இடையே ஒப்பந்தம் செய்து கொண்டதாக அரசியல் வட்டாரத்தில் கருத்து நிலவி வருகிறது. இந்த கருத்தை முதல்வர் சித்தராமையாவும், டி.கே.சிவகுமாரும் ஏற்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை.

இந்நிலையில், இரண்டரை ஆண்டு ஆட்சிக்காலம் முடிவடைந்ததால், முதல்வர் சித்தராமையா மாற்றப்படுவார் என 2025 நவம்பர் முதல் காங்கிரஸ் வட்டாரத்தில் விவாதம் நடந்து வருகிறது. தற்போது 3 ஆண்டுகால பதவியை நிறைவுசெய்துள்ள காங்கிரஸ் அரசு, அடுத்த 2 ஆண்டுகால ஆட்சியை எப்படி நடத்துவது, அதற்கு முதல்வர் மாற்றம் செய்வதா, வேண்டாமா, அமைச்சரவையை மாற்றுவதா, 2028-ஆம் ஆண்டு நடக்க இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு எப்படி தயாராவது, கர்நாடகத்தில் காலியாகவுள்ள 4 இடங்களுக்கான மாநிலங்களவை தேர்தல், சிறப்பு தீவிர திருத்தம் போன்றவற்றை குறித்து விவாதிக்க மே 26-ஆம் தேதி தில்லியில் நடைபெறும் முக்கியக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் ஆகியோருக்கு கட்சி மேலிடம் அழைப்பு விடுத்துள்ளது.



கர்நாடக முதல்வர் சித்தராமையாவுடன் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் (கோப்புப் படம்).

இந்த கூட்டத்தில் முதல்வர் சித்தராமையாவை மாற்றி, புதிய முதல்வராக டி.கே.சிவகுமாரை தேர்ந்தெடுப்பதுகுறித்துவிரிவாக ஆராயப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரவையை மாற்றியமைக்க அனுமதிக்குமாறு முதல்வர் சித்தராமையாவும், முதல்வரை மாற்றி அப்பதவிக்கு தன்னை கொண்டுவருமாறு டி.கே.சிவகுமாரும் கட்சி மேலிடத்தை வலியுறுத்தி வருகிறார்கள்.

அமைச்சரவையை மாற்றியமைத்து, புதியவர்களுக்குவாய்ப்பு அளிக்க வேண்டுமென 35-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் எம்எல்ஏக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இதுகுறித்து கட்சி மேலிடத் தலைவர்களை ஓரிரு நாள்களில் சந்திக்க காங்கிரஸ் எம்எல்ஏக்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில், இதுகுறித்து முதல்வர் சித்தராமையா பெங்களூரில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

தில்லிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெற இருக்கிறது. இக்கூட்டத்தின் விவாதப்பொருள் என்னவென்று தெரியாது. ஞாயிற்றுக்கிழமை என்னை அழைத்த அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், கூட்டம் மற்றும் தேதி குறித்து தெரிவித்தார் என்றார்.

இதுபற்றி துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறுகையில், 'கட்சி மேலிடம் அழைத்தால், கூட்டத்துக்கு செல்வேன். முதல்வர் மாற்றம் குறித்து கருத்து எதையும் தெரிவிக்க இயலாது.

கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன். 2028-ஆம் ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும்' என்றார்.

# இலங்கை காவல் துறைக்கு 134 ரோந்து வாகனங்கள்: இந்தியா வழங்கியது

**கொழும்பு, மே 25:** இலங்கை காவல் துறைக்கு இந்தியா சார்பில் 134 ரோந்து வாகனங்கள் இந்தியா சார்பில் திங்கள்கிழமை வழங்கப்பட்டது.

இரு நாட்டு உறவின் மேம்பாட்டில் இது அடுத்த முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பரில் இலங்கை அதிபர் அனுர குமார திசாநாயக இந்தியாவுக்கு வந்த போது இந்த வாகனங்கள் வழங்குவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது. இந்நிலையில், இலங்கை அதிபர் மாளிகை வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த வாகனங்கள் இலங்கை அரசிடம் இந்தியத் தூதரகம் சார்பில் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பான தகவலை இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா தனது 'எக்ஸ்' பக்கத்தில் பகிர்ந்துள்ளார். மேலும், 'இலங்கைக் காவல் துறையின் தேவையைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பது தொடங்கி, சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வது வரை அனைத்து நிலைகளில் இந்த வாகனங்கள் காவல் துறைக்கு உதவிகரமாக இருக்கும். இந்தியாவும், இலங்கையும் அனைத்து முக்கியத் துறைகளிலும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இப்போதைய நிகழ்ச்சி அதனை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது' என்று பதிவிட்டுள்ளார்.

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், 'இந்தியா எப்போதும் இலங்கைக்கு உதவிகரமாக இருக்கும். இதுபோன்ற ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தொடரும்' என்றார்.

இந்தியா அளித்தவாகனங்களை அதிபர் திசாநாயக, பொதுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆனந்த விஜேபால, இணையமைச்சர் சுனில் வடகல, காவல் துறை ஐஜி பிரியந்தா வீரசூர்யா உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர். இலங்கையின் வடக்கு மாகாண காவல் துறைக்கு அவை வழங்கப்படவுள்ளன.

# நீட் மறுதேர்வு: வெப்ப அலையைச் சமாளிக்க மாநிலங்களின் ஒத்துழைப்பு அவசியம்

## மத்திய கல்வி அமைச்சர்



**புது தில்லி, மே 25:** இளநிலை மருத்துவப் படிப்புகள் சேர்க்கைக்கான நீட் மறுதேர்வு வரும் ஜூன் 21-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், அதிகரித்து வரும் வெப்ப அலையில் தேர்வர்கள் பாதிக்கப்படாத வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மாநில அரசுகளின் ஒத்துழைப்பை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக மாநில ஆளுநர்கள், முதல்வர்கள் மற்றும் அரசு நிர்வாக அதிகாரிகளுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

நீட் மறுதேர்வு வரும் ஜூன் 21-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்தச் சூழலில், வெப்ப அலையின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், நீட் தேர்வர்களின் நலனைக் காக்க தேர்வு மையங்களில் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகிறது.

பாதுகாப்பான குடிநீர் வசதி, போதிய இருக்கை வசதி, மின்விசிறிகள் மற்றும் குளிரூட்டிகள் முறையாக செயல்படுவது, தூய்மையான கழிவறைகள், நிழல் வசதிக்காக சாய்வு மேற்கூரைகளுடன் கூடிய காத்திருப்போர் பகுதிகள், தடையற்ற மின் விநியோகம், நடமாடும் கழிவறைகள் உள்ளிட்ட வசதிகள் தேர்வு மையங்களில் இடம்பெறுவது அவசியமாகிறது.

தேர்வெழுதும் மாணவர்களின் உடல் நலன் மிக முக்கியமானது என்பதால், இந்த அத்தியாவசிய அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்த மாவட்ட அதிகாரிகளுக்கும், அனைத்து பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களுக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் (தகுதிகாண் நுழைவுத் தேர்வு) தேர்வு கடந்த மே 3-ஆம் தேதி நடத்தப்பட்டது. நாடு முழுவதும் 22 லட்சம் பேர் தேர்வெழுதினர்.

இந்நிலையில், நீட் வினாத்தாளில் இருந்த அதே கேள்விகளைக் கொண்ட மாதிரி வினாத்தாள், ராஜஸ்தானில் முன்கூட்டியே வெளியானதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

முதல்கட்ட விசாரணையில் இந்த மாதிரி வினாத்தாள் வாட்ஸ்ஆப், டெலிகிராம் மூலம் பல்வேறு மாநிலங்களில் பரவியிருப்பது கண்டறியப்பட்டதால், நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. வரும் ஜூன் 21-ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.

# பயங்கரவாதத்துக்கு நிதியளித்த வழக்கு: காஷ்மீரில் என்ஐஏ தீவிர சோதனை

**ஸ்ரீநகர், மே 25:** தடை செய்யப்பட்ட ஜமாத்-ஏ-இஸ்லாமி அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளித்த வழக்கு விசாரணையின் ஒரு பகுதியாக காஷ்மீரில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் திங்கள்கிழமை தீவிர சோதனை மேற்கொண்டனர்.

காஷ்மீரின் ஸ்ரீநகர் மற்றும் சோபியான் மாவட்டங்களில் மூன்று இடங்களில் இந்தச் சோதனையை அவர்கள் மேற்கொண்டனர்.

இதுகுறித்து என்ஐஏ அதிகாரிகள் கூறுகையில், 'பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்த வழக்கு தொடர்பாக, கடந்த மாதம் சட்டவிரோத நிறுவனம் என்று அறிவிக்கப்பட்ட சோபியானின் இமாம் சாஹிப் பகுதியில் உள்ள தருல் உலூம் சிராஜுல் உலூம் பள்ளி, மோலு சித்ரகாம் பகுதியில் உள்ள ஜெல் அமைப்பின் முன்னாள் தலைவர் ஷஹஜாதா ஔரங்சீபின் வீடு மற்றும் ஸ்ரீநகரின் லால் பஜார் பகுதியில் உள்ள ஜாமியாத் உல் பன்னாட் என்ற இஸ்லாமிய மாணவிகளுக்கான மதரஸா உள்ளிட்ட இடங்களில் திங்கள்கிழமை தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் பல சர்ச்சைக்குரிய நிதி பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்கள், மின்னணு உபகரணங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன' என்றார்.

இதுகுறித்து என்ஐஏ வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'விசாரணையில், பல்வேறு பகுதிகளிலிருந்து நிதியை சேகரித்து ஜம்மு-காஷ்மீரிலும் நாட்டின் பிற பகுதிகளிலும் பயங்கரவாதத்தை தூண்டும் பணியில் ஜெல் அமைப்பு ஈடுபட்டது தெரியவந்தது. நன்கொடை மற்றும் நலத் திட்ட உதவிகளுக்கு என்ற பெயரில் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்து இந்த பயங்கரவாத நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி பயங்கரவாத செயல்களுக்கு மட்டுமின்றி, ஹிஸ்புல் முஜாஹிதீன் போன்ற பிற தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இதுதொடர்பான விசாரணை தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டது.

# பிரதமரின் ஆணவ அரசுக்கு மாணவர்கள் முடிவுகட்டுவர் - ராகுல்

**புது தில்லி, மே 25:** மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) நடத்திய 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இணையவழி மதிப்பீட்டு முறையில் சர்ச்சை எழுந்துள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடியின் ஆணவ அரசுக்கு மாணவர்கள் முடிவு கட்டுவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் 'எக்ஸ்' வலைதளத்தில் திங்கள்கிழமை வெளியிட்ட பதிவில், 'தேர்வுத் துறை என்ற மற்றொரு அமைப்பையும் இப்போதைய மத்திய அரசு சீர்குலைத்துவிட்டது. நீட் நுழைவுத் தேர்வு, சிபிஎஸ்இ பொதுத் தேர்வு என தேர்வு முறைகேடுகள் தொடர்கின்றன. இதற்கு முன்பு பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சிபிஎஸ்இ தேர்விலும் இப்போது பிரச்னைகளும், குழப்பங்களும் எழுந்துள்ளன. 18.5 லட்சம் மாணவர்கள் இத்தேர்வில் பங்கேற்றுள்ளனர். இதில், திரையில் மதிப்பீடு (ஓஎஸ்எம்) செய்வதில் தவறுகள், மதிப்பிடுவதில் பிழைகள் உள்பட பல பிரச்னைகள் எழுந்துள்ளன. ஆனால், இவற்றைக் கண்டுகொள்ளாமல் மத்திய கல்வியமைச்சர் தனது பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதில்தான் கவனமாக இருக்கிறார்.



தவறாகமதிப்பிடப்பட்டதைசுட்டிக்காட்டிய 17 வயது மாணவருக்கு எதிராக அவதூறு பரப்புகிறார்கள். முக்கியமாக பாஜக தகவல் தொழில்நுட்பப் பிரிவினர் அந்த மாணவரை தேசவிரோதி என்றும், வெளிநாட்டு முகவர் என்றும் எளனம் செய்கிறார்கள். தனது எதிர்காலத்துக்காக குரல் எழுப்பிய மாணவருக்கு இந்த ஆட்சியில் கிடைக்கும் பரிசு இதுதான்.

மாணவர்கள் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டனர். அவர்களைக் கண்டு ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர் என்பது அவர்களின் செயல்பாடுகளில் தெரிகிறது. கேள்வி கேட்பவர்களை நசுக்குவதே இந்த அரசின் நோக்கமாக உள்ளது. ஆனால், பிரதமர் நரேந்திர மோடியின் ஆணவ அரசுக்கு மாணவர்கள் முடிவு கட்டுவார்கள் என்பது மட்டும் உறுதி' என்று ராகுல் கூறியுள்ளார்.

# பிஜு ஜனதா தளம் எம்.பி. ராஜிநாமா: பாஜகவில் இணைய முடிவு

**புவனேசுவரம், மே 25:** ஒடிஸாவில் முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதா தளம் கட்சி (பிஜேடி) மாநிலங்களவை எம்.பி. தேவாசிஷ் சமந்தராய் பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் விலகினார். அவர் விரைவில் மாநிலத்தில் ஆளும் பாஜகவில் இணைய இருக்கிறார்.

அரசியல்ரீதியாக நவீன் பட்நாயக்குடன் மிக நீண்டகாலம் மிகவும் நெருக்கமாகச் செயல்பட்டுவந்த சமந்தராய் விலகல், பிஜேடி-க்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

கடந்த 2024 ஒடிஸா சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவிடம் பிஜேடி தோல்வியடைந்ததற்கு ஐபிஎஸ் அதிகாரியாக இருந்து பிஜு ஜனதா தளத்தில் இணைந்த வி.கே.பாண்டியன்தான் காரணம் என்று சமந்தராய் குற்றஞ்சாட்டி வந்தார். மேலும், கட்சித் தலைவர் நவீன் பட்நாயக்கை சந்தித்துப் பேசவிடாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

கட்சியில் இருந்து விலகியது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'கட்சியில் இருந்து விலகியதுடன், மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனைச் சந்தித்து எம்.பி. பதவியை ராஜிநாமா செய்வதாகவும் கடிதம் அளித்துவிட்டேன். கட்சித் தலைவரைச் சந்திக்க முடியாது என்ற நிலை ஏற்பட்ட பிறகு அங்கு தொடர்வதற்கு எந்தக் காரணமும் இல்லை' என்று கூறியுள்ளார்.

# கர்நாடகத்தில் ஆற்றில் மூழ்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 11-ஆக உயர்வு

**கார்வார், மே 25:** கர்நாடகத்தில் ஆற்றில் மூழ்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 11-ஆக உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலம், உத்தர கன்னடா மாவட்டம், பட்கல் வட்டத்தில் உள்ள ஷிராளி கிராமத்தில் பாயும் தட்டேஹக்கலு நதியில் நன்னீர் சிப்பிகளை சேகரிக்க ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் ஞாயிற்றுக்கிழமை சென்றுள்ளனர். அப்போது திடீரென ஆற்றின் நீரோட்டம் அதிகரித்ததில், 2 பேர் அடித்துச் செல்லப்பட்டனர். இவர்களை மீட்க மற்றவர்கள் ஆற்றின் ஆழத்துக்குச் சென்றனர்.

இந்த சம்பவத்தில் 7 பெண்கள் உள்பட 10 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட மேலும் இருவரை தேடும் பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில், திங்கள்கிழமை மற்றொருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது. இதனால் ஆற்றில் மூழ்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 11-ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து உத்தர கன்னட மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எம்.என். தீபன் கூறுகையில், 'ஆற்றுநீரில் அடித்துச் செல்லப்பட்டவர்களின் உடல்கள் அனைத்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 11 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் உடற்கூறாய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் உயிர் தப்பிய 3 பேர், கூடுதல் மருத்துவ சிகிச்சைக்காக உடுப்பியில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் ஒருவர் குணமாகி வீடுதிரும்பியுள்ளார்' என்றார்.


தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,**
பழநி நகர், பழநி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

ந.க.எண்.1255/2026/எப்2 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 20.05.2026

இணைஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி அவர்களால் பிரசாதம் தயாரிப்பு நிலையம் நவீன முறையில் மாற்றி அமைக்க Thermic Fluid Boiler வடிவமைத்து நிறுவுதல் ஆகியவற்றில் தகுதி மற்றும் முன் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. மேலும், மேற்காணும் பணிக்கான தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் (Technical Specification) www.palanimurugan.hrce.tn.gov.in அல்லது www.hrce.tn.gov.in வலைதளத்திலிருந்து 27.05.2026 முதல் 09.06.2026 வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட பணிக்கான மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் 10.06.2026 மாலை 4.00 P.M மணிக்குள் இணைஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அறங்காவலர் குழு | செ.ம.தொ.இ/1942/ஒப்பந்தப்புள்ளி/2026 | இணை ஆணையர்/ செயல் அலுவலர்



**MANAPPURAM FINANCE LTD.**

CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.06.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கன்னியாகுமரி, அஞ்சுகிராமம் கன்னியாகுமரி, 0117920730019179, 9180, பீச் ரோடு நாகர்கோயில், 0125250700048181, 9092, 9161, 0125250730008369, 8482, 8488, கன்னியாகுமரி, 0102100700771554, 2521, 3011, கொளச்சல், 0102130700780041, கோட்டார் நாகர்கோயில், 0102490730005772, குழித்துறை, 0102890700035812, நாகர்கோயில், 0124420700039253, சாமியார் மடம், 0103140700056971, வடசேரி ஜங்ஷன், 0102980700067521, 8165, 9152, 9644, 9704, ஆலங்குளம், 0102410700776014, 6640, 7273, 0102410730020208, 6224, 6968, 6969, 7104, அம்பாசமுத்திரம், 0103330700830714, 0726, 0760, 0787, 0811, 0829, 0899, 0919, 0924, 2285, 0103330730030984, 3434, 3873, 4685, கீழப்பாவூர், 0126790700048686, 9013, 0923, தென்காசி, 0104530700758360, 8705, 9031, 9150, 0104530730019474, 9528, 9758, 9808, 9904, தூத்துக்குடி, சாத்தான்குளம், 0133240700051972, 2056, 2111, 3749, 3964, 0133240730012101, 2147, 3755, 4257, திருநெல்வேலி, கடயம் திருநெல்வேலி, 0130750700043715, கடயநல்லூர், 0124390700030428, 0639, கலக்காடு திருநெல்வேலி, 0126650700049717, மேலகரம் திருநெல்வேலி, 0121630730016046, 6961, பாளயங்கோட்டை, 0136220700011673, 1786, ஸ்ரீபுரம் திருநெல்வேலி, 0120380700041816, 2480, 2553, 2779, 2792, 2797, 3060, 3095, திருநெல்வேலி, 0103290700788568, 4836, 0103290730033737, தூத்துக்குடி, சிதம்பரம் நகர் தூத்துக்குடி, 0117830700067941, 0117830730029449, 9536, 0058, காமராஜ் சாலை திருச்செந்தூர், 0118490700067617, 7623, 7919, 8366, 9763, 2105, 3371, 3899, 3924, 4136, 4272, 5233, சுயத்தாறு தூத்துக்குடி, 0115020700047802, 8201, 8227, 2463, 2947, 3831, 3864, 5003, 5004, 5065, 5200, 5244, 5279, 0115020730028245, 8552, 8553, 9041, கோவில்பட்டி, 0102620700065302, 6540, 3366, 0102620730039744, 0483, நஸரத், 0102940700763456, 3694, 3912, விளாத்திகுளம், 0102870700747344, 7744,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக


# சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு: விடைத்தாள்கள் மாறியதாக மாணவர்கள் குற்றச்சாட்டு

**புது தில்லி, மே 25:** மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) நடத்திய 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் விடைத் தாள்கள் மாறியதாக மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தேர்வு முடிவுகளுக்குப் பிந்தைய மறுமதிப்பீடு செயல்முறையின்கீழ் சிபிஎஸ்இ பதிவேற்றம் செய்த தங்களின் விடைத்தாள்களில் கையெழுத்து மாறியிருப்பதை சுட்டிக்காட்டி அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

நிகழாண்டு முதல் 12-ஆம் வகுப்புத் தேர்வின் விடைத் தாள்களை ஸ்கேன் செய்து கணினித் திரையிடல் மூலம் திருத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளதாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

**வேறொருவரின் விடைத் தாள்:** இந்நிலையில், தில்லியைச் சேர்ந்த வேதாந்த் என்ற மாணவன் மறுமதிப்பீடு முறையின்கீழ் சிபிஎஸ்இ பதிவேற்றம் செய்த இயற்பியல் விடைத் தாளில் தனது கையெழுத்து இல்லை என எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர், ' இயற்பியல் தேர்வின் எதிர்பார்த்ததைவிட குறைவான மதிப்பெண்கள் பெற்றதால் மறுமதிப்பீடு செய்தேன். அப்போது இந்த அதிர்ச்சிகர சம்பவம் நிகழ்ந்துள்ளது. எனது ஆங்கிலம் மற்றும் கணினி பொறியியல் விடைத் தாள்களில் இருக்கும் கையெழுத்துக்கு முற்றிலும் வேறுபட்டதாக இயற்பியல் விடைத் தாள் உள்ளது.

இது வேறொரு மாணவரின் விடைத்தாளாகத்தான் இருக்க வேண்டும். அப்படியெனில், முற்றிலும் தவறான மதிப்பீடே நடந்திருக்க வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாக சிபிஎஸ்இ விசாரணை நடத்தி உண்மையை கண்டறிய வேண்டும். மாற்றப்பட்ட எனது விடைத்தாளை கண்டறிந்து நியாயமாக மதிப்பீடு செய்ய வேண்டும்' என குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து சஞ்சனா எனும் மாணவி தனது வேதியியல் விடைத் தாள் மாற்றப்பட்டதாக எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டார். இதுபோல் சில குற்றச்சாட்டுகளை மாணவர்கள் சிலர் எக்ஸ் வலைதளத்தில் குறிப்பிட்டனர்.

முன்னதாக, கணினி திரையிடல் முறையின்கீழ் விடைத் தாள்கள் திருத்தப்பட்டதால் மதிப்பெண்கள் குறைந்துவிட்டதாக தேர்வு முடிவுகள் வெளியான போது மாணவர்களும் பெற்றோர்களும் குற்றஞ்சாட்டினர். அதன்பிறகு விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட சிலருக்கு கூடுதலாகவும் சிலருக்கு குறைவாகவும் வசூலிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. தொழில்நுட்பக் கோளாறால் இவ்வாறு நிகழ்ந்ததாகவும் கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணம் திருப்பியளிக்கப்படும் எனவும் சிபிஎஸ்இ உறுதியளித்தது குறிப்பிடத்தக்கது.